## ஆறிவித்தல்

## இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III ஆட்சேர்ப்பு (திறந்த) போட்டி பரீட்சை 2021(2024)

இலக்கம் 2237 மற்றும் 16.07.2021 திகதியிட்ட வர்த்தமானி வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்பு அறிவிப்பின் படி, இலங்கைப் பரீட்சை திணைக்களத பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் 29.07.2023 அன்று நடத்தப்பட்ட மேற்படி போட்டிப் பரீட்சையில் எழுத்துத் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பொது ஆளணியினர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பொது நேர்முகத் பரீட்சை மற்றும் வாய்மொழி நேர்முகத் பரீட்சையில் தகுதி பெற்ற 147 பேரின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதன்படி, உங்கள் விசேட கவனம் பின்வரும் விடயங்கள் மீது ஈர்க்கப்படுகிறது.

i. இந்தப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III பொது ஆளணியினருக்கு 113 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

ii ஆட்சேர்ப்பு அறிவிப்பின் 10.2 (ஆ) இல் 1 (i) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 25% அளவினர் எனும் இரண்டின கூட்டுததொகையாக கணித்து விண்ணபதாரர் எண்ணிக்கையினர் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதால், இலங்கை பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்பட்ட மேற்படி போட்டிப் பரீட்சையில் பொதுப் பிரிவு மற்றும் விசேட சேவை பிரிவின் அனைத்துத் வினாத்தாள்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட புள்ளிகளின் கீழ் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் மொத்த புள்ளிகளின் தகுதி தொடரொழுங்கு அடிப்படையில் 147 பேர்களின் (நூற்றி நாற்பத்து ஏழு) பெயர் பட்டியல் இதில் காட்டப்பட்டுள்ளது.

iii இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் பொது நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்பதோடு எதிர்காலத்தில் அந்த விண்ணப்பதாரர்களுக்கு அதற்கான நேர்முக பரீட்சை அழைப்பு கடிதங்கள் அனுப்பப்படும்.

iv. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொது நேர்முக பரீட்சை ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலின் படி நடத்தப்படும் என்பதோடு அதற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. பொது நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்ப்புக்குத் தேவையான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்ததாக உறுதிசெய்யப்பட்ட விண்ணபதாரர்கள் மட்டுமே வாய்மொழி நேர்முக சோதனைக்கு தோற்றத் தகுதி பெறுவார்கள்.

v. எழுத்துப் பரீட்சையில் தகுதி பெறுவது அல்லது பொது மற்றும் வாய்மொழி நேர்முகத் பரீட்சைக்கு தோற்றுவது, திறந்த அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III க்கு நியமனம் பெறுவதற்கு தகுதியாக கருதப்படாது.

ஜே.எம். திலகா ஜயசுந்தர

செயலாளர்

கல்வி அமைச்சு

2024.09.03